# சாலைத் தடுப்பை அமைத்து வருகையாளர்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்கப்படும்



**நமது நிருபர்**

கோலாலம்பூர், செப். 3- இந்தியாவைச் சேர்ந்த ஜி.விஜயலட்சுமி ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் கடந்த ஆகஸ்ட் மாதம் 23 தேதி தவறி குழிக்குள் விழுந்ததைத் தொடர்ந்து சம்பவம் நிகழ்ந்த இடத்தின் சுற்றுப் பகுதியில் சாலைத் தடுப்பை கோலாலம்பூர் மாநகர் மன்றம் அமைக்கவிருக்கிறது.

இந்த தடுப்பு விஸ்மா யாக்கினிலிருந்து 200 மீட்டர் தூரத்திற்கு அமைக்கப்பட இருப்பதாக மாநகர் மன்றத் தலைவர் டத்தோஸ்ரீ மைமுனா முகமட் ஷாரிஃப் தெரிவித்தார்.

அப்பகுதியைச் சுற்றிலும் உள்ள கடை உரிமையாளர்கள், வருகையாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த மாநகர் மன்றம் மேற்கொள்ளும் உடனடி நடவடிக்கைகளில் இதுவும் ஒன்றாகும்.

இதுகுறித்து போலீசாரிடமும் கலந்தாலோசிக்கப்பட்டு விட்டது. இந்த தடுப்பு பொதுமக்களின் பாதுகாப்பிற்கு மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது.

அதே சமயம் தனது அனைத்துக் குழாய்களிலும் இண்டா வாட்டர் நிறுவனம் வெளிப்படையான மதிப்பீட்டு நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. இப்பகுதியில் மண்ணின் புவி தொழில்நுட்ப நிலை குறித்து மேல் விவரங்களைத் தெரிந்து கொள்ள கனிம மற்றும் புவியியல் துறையுடன் மாநகர் மன்றம் தொடர்பு கொண்டுதான் இருக்கிறது.

இவ்விவகாரம் இன்னும் விரிவாக விவாதிக்கப்படும் என்பதால் சம்பவ இடத்தின் பயன்பாட்டு வரைபடத்தைத் தயார் செய்யும்படி பயன்பாட்டுத் தரப்பினரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாகச் செய்தியாளர்களிடம் பேசிய போது குறிப்பிட்டார்.